# 23

# அல்குர்ஆனின் சிறப்புக்கள்

‘‘நிச்சயமாக இந்தக் குர்ஆன் (மனிதர்களுக்குத் தெளிவான) மிக நேரான வழியை அறிவிக்கின்றது’’ (அல்குர்ஆன் 17:09).

‘‘நிச்சயமாக இந்தக் குர்ஆன் அல்லாஹ்வின் உறுதிமிக்க கயிறு; வழிகாட்டும் பேரொளி! பயன்மிகு சஞ்சீவி; அதனைப் பற்றிப் பிடிப்போருக்கு அது பாதுகாப்பளிக்கும்; அதனைப் பின்தொடர்வோருக்கு வெற்றியளிக்கும்; கோணலை அது சீராக்கும்; தவறுகளைச் சரிப்படுத்தும்; அதன் அற்புதங்கள் முடிந்துவிடப் போவதில்லை; திரும்பத் திரும்ப ஓதுவதால் அது பழமை அடைவதுமில்லை; எனவே அதனை நீங்கள் ஓதி வாருங்கள். அதன் ஒவ்வொரு எழுத்துக்கும் பத்து நன்மைகள் கிடைக்கும். (அல்-ஹாகிம்)

அன்பின் மாணவர்களே! அல்-குர்ஆன் பற்றிக் கூறும் அல்குர்ஆன் ஆயத் ஒன்றையும் ஹதீஸ் ஒன்றையும் மேலே காண்கிறீர்கள்.



முஹம்மத் ﷺ அவர்களின் 40ஆம் வயது முதல் 63ஆம் வயது வரை சுமார் 23 வருட காலம் அல்லாஹ்வால் வஹியாக அருளப்பட்டவற்றின் தொகுப்பே இந்த அல்குர்ஆன் ஆகும். மனித இனத்துக்கு அருட்கொடையாக அருளப்பட்ட அது கலீபா அபூ பக்ர் (ரழி) அவர்களின் காலத்தில் நூலுருப் பெற்றது.

அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட வேதங்களில் அல்குர்ஆன் இறுதியானதாகும். அதன் வருகை யுடன் முன்னைய வேதங்கள் செல்லுபடியற்றதாகி விட்டன. உலகப் பொது மறையான இது சகல விடயங்கள் பற்றியும் பேசுகின்றமை அதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

அல்லாஹ்வால் உலகுக்கு அனுப்பப்பட்ட நபிமார்களுக்கு, அவன் முஃஜிஸாத் எனும் அற்புதங்களை வழங்கினான். முஹம்மத் ﷺ அவர்களுக்கு வழங்கப்பட்ட மிகப் பெரிய அற்புதம் அல்குர்ஆனாகும்.

அல்குர்ஆனைச் செவியுற்ற சிலர், அது நபி ﷺ அவர்களால் உருவாக்கப்பட்டது என்றும் வேறு ஒருவரால் அவருக்குக் கற்றுக் கொடுக்கப்படுகின்றது என்றும் கூறினர். இக்கூற்றை அல்குர்ஆன் பின்வருமாறு மறுக்கின்றது.

''இதனை (நம்முடைய தூதராகிய) அவர் பொய்யாகக் கற்பனை செய்து கொண்டார் என அவர்கள் கூறுகின்றனரா? (அவ்வாறாயின் நபியே) நீர் கூறும்; 'நீங்கள் உண்மை சொல்பவராயிருந்தால் அல்லாஹ்வையன்றி உங்களுக்குச் சாத்தியமானவர்களை (உங்களுக்குத் துணையாக) அழைத்துக் கொண்டு (நீங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து) இதிலுள்ளதைப் போன்றதோர் அத்தியாயத்தை (அமைத்து)க் கொண்டு வாருங்கள்'' (அல்குர்ஆன் 10:38)



அல்குர்ஆனின் மற்றொரு சிறப்பம்சம், அது எல்லாக் காலத்துக்கும் பொருத்தமாக அமைந்துள்ளதாகும். முன்னைய வேதங்கள் குறிப்பிட்ட காலத்துக் கும் பிரதேசத்துக்கும் என வழங்கப்பட்டன. அல்குர்ஆனின் வருகையுடன் அவை செல்லுபடியற்றதாகிவிட்டன.

அல்குர்ஆன் அருளப்பட்டதிலிருந்து இன்றுவரை அதில் எத்தகைய மாற்றமும் இடம்பெறாமை அதன் மற்றொரு சிறப்பம்ச மாகும். இந்நிலை இறுதி நாள் வரை தொடரும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு அது பாதுகாக்கப்படக் காரணம், அது சகல உலக இரட்சகனாகிய அல்லாஹ்வால் அருளப்பட்டமையே. இதனைப் பின்வரும் வசனம் குறிப்பிடுகின்றது.

''நிச்சயமாக நாம் தாம் இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம். ஆகவே (அதில் எத்தகைய மாறுதலும் அழிவும் ஏற்படாத வாறு) நிச்சயமாக நாமே அதனை இரட்சித்துக் கொள்வோம்'' (அல்குர்ஆன் 15:09)

இன்று அல்குர்ஆன் பல வடிவங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளது. உலகில் எந்த நூலும் அல்குர்ஆன் மனனமிடப்பட்ட அளவு மனனமிடப்படவில்லை. பல இலட்சக்கணக்கான ஹாபிழ்கள் காணப்படுவது இதற்கு எடுத்துக்காட்டாகும். நூல் வடிவிலும், இறுவட்டுக்களிலும் கூட அது பதிவு செய்யப்பட்டுள்ளது.

அல்குர்ஆனை ஓதும்போது அதன் ஒவ்வொரு எழுத்துக்கும் 10 நன்மைகள் வழங்கப்படுவது அதற்குள்ள மற்றொரு சிறப்பம்சமாகும். அதனைப் பொருள் விளங்காமல் ஓதினாலும் கூட அந்த நன்மை வழங்கப்படுகின்றது. வேறு எந்த நூலை வாசித்தாலும் இவ்வாறு நன்மை கிடைப்பதில்லை. இதனைப் பாட ஆரம்பத்திலுள்ள ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

மேலும் குர்ஆனை விளங்கி ஓதுவதன் மூலம் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதைப் பின்வரும் ஹதீஸ் எடுத்துக் காட்டுகின்றது.

‘‘அல்குர்ஆனை உடையவர்களே, நீங்கள் திருக்குர்ஆனைத் தலையணையாக ஆக்கிக் கொள்ள வேண்டாம். இரவிலும் பகலிலும் அதனை உரிய முறைப்படி ஓதுங்கள். அதனைப் பரப்புங்கள். அதனை இனிய குரலில் ஓதுங்கள். அதன் கருத்துக்களைச் சிந்தித்து ஆராய்ச்சி செய்யுங்கள். அப்போது நீங்கள் வெற்றியடைவீர்கள். அதனுடைய நன்மைகளை (இவ்வுலகில்) பெற அவசரப்படாதீர்கள். நிச்சயமாக அதற்குரிய கூலி (மறுமையில்) உண்டு’’ (பைஹகி).

அல்குர்ஆனை அல்லாஹ் இலகுவான வேத நூலாகவே அருளியுள்ளான். அதன் போதனைகள், பின்பற்றுவதற்கு இலகுவானவை. மனித இயல்புக்கு உட்பட்டவையே. இதனை அல்குர்ஆன் ஸூரதுல் கமரில் திரும்பத் திரும்ப பல இடங்களில் கூறி உறுதிப்படுத்துகின்றது.

‘‘(மனிதர்கள்) நல்லுணர்ச்சி பெறும் பொருட்டு இந்தக் குர்ஆனை நிச்சயமாக நாம் மிக்க எளிதாக்கி வைத்திருக்கிறோம். ஆகவே (இதனைக் கொண்டு) நல்லுணர்ச்சி பெறுவோர் எவரும் உண்டா’’ (54 : 17, 22, 32, 49)

இந்த வகையில் அனைத்து மனிதரும் பின்பற்ற இலகுவான போதனைகளைக் கொண்டதாக அல்குர்ஆன் விளங்குவதும் அதன் மற்றொரு சிறப்பம்சமாகும்.

இன்று முஸ்லிம்கள் அல்குர்ஆனை ஒரு புனிதப் பொருளாக வைத்துப் பார்க்கின்றனர். அவர்களிற் சிலர் தமக்குத் தேவையான வாழ்க்கை வழிகாட்டல்களை அதிலிருந்து பெறத் தவறிவிடுகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். எமக்கான வழிகாட்டல்களை அதிலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் சிறந்த சமுதாயம் உருவாக முடியும்.

**பயிற்சி:**

1. அல்குர்ஆனின் சிறப்பு பற்றிக் கூறக் கூடிய அல்குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் தொகுத்து எழுதுக.

**செயற்பாடு:**

1. அல்குர்ஆனை ஓதுவதால் கிடைக்கும் பயன்களை உலமாக்களிடம் கேட்டறிந்து பட்டியற்படுத்துக.
2. ‘‘அல்குர்ஆனின் சிறப்புகள்’’ எனும் தலைப்பில் மாணவர் மன்றத்தில் உரையாற்று வதற்கு ஓர் உரையைத் தயார் செய்க.